# வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள்

# பாதுகாப்பு அமைச்சு

# 2022

## செயலாற்றுகை அறிக்கை

**இல. 1090, சிரீ ஜயவர்தனபுர வீதி, ராஜகிரிய**

# செயலாற்றுகை அறிக்கை
# **2022**

## வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## **செலவினத் தலைப்பு இல: 161**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு | 15 |
| அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் | 23 |
| அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை | 31 |
| அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள் | 39 |
| அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை | 39 |
| அத்தியாயம் 06 - மனித வள விபரம் | 40 |
| அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை | 43 |

**வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து .............**

உயிர்ப் பல்வகைத்தன்மையினால் உலகத்தில் வேறு எந்த நாடும் இலங்கையை விஞ்சாது. அவ்வாறான நாடொன்றில் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு போன்ற பிரதான விடயத்தின் துறைகளை செயன்முறைப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்யக் கிடைத்தது எனக்குக் கிடைத்த பாக்கியமொன்றாகக் கருதுகிறேன்.

**2022** ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநிலைமை மற்றும் நாட்டில் நிலவிய பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தாலும் எமது அமைச்சும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உயிர்ப் பல்வகைத்தன்மையைப் பாதுகாப்பதனையும் தவறாது மேற்கொள்கின்றது. அவ்வாறே நாட்டில் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கு சுற்றுலாக் கைத்தொழிலூடாக நேரடியாக ஒத்துழைப்பை வழங்குவதற்கு முடியுமாக உள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதன்படி **2022** ஆண்டினுள் **2493.8** ரூ. மி. வருமானத்தை தேசிய வருமானத்துக்கு சேர்த்துக் கொள்ள முடியுமாக உள்ளது.

எமது நாட்டில் 19 மாவட்டங்களுக்கும் பிரதேச செயலகப் பிரிவுகள் **133** க்காகவும் தாக்கம் செலுத்துகின்ற பிரச்சினையொன்றான யானை மனித மோதலுக்குப் பதிலாக யானை மனித நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் இரவு பகலைப் பாராது பணியாற்றுகின்றது. யானை மனித மோதலைக் குறைப்பதற்காக யானை வேலிகளை அமைத்தல், போன்றே காட்டு யானைகளுக்கு சுதந்திரமாக நடமாடுவதற்கு தடங்கலாக உள்ள யானைகள் பயணப்பாதையை துரிதமாக விடுவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வனவிலங்குகளுக்குத் தேவையான நீர், உணவினைப் பெற்றுக் கொள்வதற்காக வாழிடங்களின் செறிவூட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. தேசிய பூங்காக்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தலும் ஒதுக்கப் பிரதேசங்களில் பாதை அமைப்புக்களின் புனர்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் வனப்போர்வையை **30%** வரை உயர்த்துவதன் சவாலை வெற்றி கொள்வதற்காக வன பாதுகாப்புத் திணைக்களம் விசேடமான கடமைப் பொறுப்பொன்றை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. பசுமைப் போர்வையை விரிவுபடுத்தும் நோக்குடன் வணிக வனச்செய்கையின் உருவாக்கம், முதிர்ச்சியடையும் வனச்செய்கையை வெட்டி உருவாக்கப்பட்ட வனச்செய்கையின் பராமரிப்பு, கைவிடப்பட்ட வீட்டுத்தோட்டங்களை காடுகளாக மாற்றிய நிலங்களைப் பராமரித்தல்,, சதுப்பு நிலங்கள் மற்றும் ஈரநில அமைப்புக்களின் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் விவசாய வனச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்கும், பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட காட்டு நிலங்களை கிராமிய சமூகத்துடன் உடன்படிக்கையின் கீழ் வழங்கி வனச்செய்கையுடன் விவசாய போகத்தைக் கொண்ட விவசாய வனச்செய்கையை ஏற்படுத்துதல், , வனச்செய்கையுடன் பல வருடங்கள் உணவு போக செய்கையை பிரச்சாரம் செய்வதன் மூலம் சமூகத்துடன் கலந்து கொண்டு முகாமைத்துவத்துக்கு இடம் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் கீழ் உள்ள தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் விலங்குகளைப் பாதுகாத்தும் விலங்குகளை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு நாட்டிற்கு பாரிய வருமானத்தை வழங்குவதற்காக செயற்படுகின்றது. எனினும் **2022** நிலவிய கொவிட் தொற்று நிலைமையை சந்தித்ததில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவது பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு வருமானம் குறைவது பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளது. மேலும் நிலவிய பொருளாதார நெருக்கடியை சந்தித்ததில் உணவுகளின்

விலை துரிதமாக அதிகரித்துச் செல்லும் காரணத்தினால் விலங்குகளுக்கு உணவு வழங்குவது தொடர்பாக திணைக்களத்துக்கு பிரதான சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இச்சவாலை வெற்றி கொள்வதற்காக விலங்கு உணவு உற்பத்திக்காக தியகம மற்றும் கஹபொல பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே தற்போதுள்ள மிருகக்காட்சிசாலைகளுக்கு உரிய நிலங்களினுள் விலங்குகளுக்குத் தேவையான புல் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சத்வ சவிய எனும் பெயரில் தியாகி முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு இதன் மூலம் விலங்கு ஆர்வலர்களுக்கு விலங்குகளின் உணவுக்காக ஒத்துழைப்பு வழங்கும் சந்தர்ப்பம் அதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சின் கீழ் செயற்படுகின்ற சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் மூலம் உயிர்ப் பல்வகைத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களத்தினூடாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கருத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் சுற்றாடல் சற்றுலாக் கைத்தொழிலையும் விருத்தி செய்து உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றது. அவ்வாறே வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களங்களின் திறன் விருத்தியை உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் கீழ் உள்ள அரச மரக் கூட்டுத்தாபனம் நாட்டின் நம்பிக்கையை வென்ற சிறந்த மரங்கள் மற்றும் மரத்திலான பொருட்களின் வழங்குனர்களாகுதல் மற்றும் சந்தையில் உண்மையான தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் செயற்படுகின்றது. அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற மரக் குற்றிகளுக்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதனால் அதன் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்வதற்காகப் பணியாற்றுகின்றது.

மரம் செடிகள், விலங்குகள், நான்கு கால்களையுடையவைகளைப் போன்றே உலகில் அழகான நாடுகளிடத்திற்கு இணையும் இந்நாடு உயிர்ப் பல்வகைத்தன்மையைப் பாதுகாக்கும் முதல் பொறுப்பினை உடைய இவ்வமைச்சின் அனைத்து கடமைப்பொறுப்புகளுக்காகவும் ஒன்றிணைந்து பணியாற்றுகின்ற வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஆர். எம். சீ. எம். ஹேரத்

அவர்களுக்கும் இம்முன்னேற்ற அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் அனைத்து அதிகாரிகளுக்கும் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்கிய பணிக்குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சட்டத்தரணி பவித்ரா வன்னிஆரச்சி**

**வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்**

## வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து ..........

வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்புக்கு முதலிடம் வழங்கி உரிய கொள்கை சட்டதிட்டங்களின் பிரகாரம் மனிதனுக்கு மிகவும் உணர்திறன்மிக்க மரம் செடிகள், விலங்குகள், நான்கு கால்களையுடையவைகளை பாதுகாத்துக் கொள்ளும் பெரும் செயற்பணிக்கு தலைமைத்துவத்தை வழங்குகின்ற வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை இணைப்பதற்கு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வமைச்சின் விடயப் பரப்பின் கீழ் செயற்படுகின்ற வனஜீவராசிகள் பாதுகாப்பு, வன பாதுகாப்பு, தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களங்கள் மூன்றும் போன்றே அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் மூலம் பாரிய கடமைப்பொறுப்பொன்று தற்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வனவிலங்குகள் மற்றும் மனித சமூகத்துடன் அந்நியோந்நியமானதுமான தொடர்பையும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல், சமூக அடிப்படைச் சங்கத்தினூடாக ஒதுக்கத்தை அண்டிய மக்களின் வாழ்வாதார விருத்திக்காக தேனீக்களின் கட்டுப்பாடு, பால் மாடுகளின் கட்டுப்பாடு போன்ற சுய தொழில்களை உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை மேற்கொண்டு மக்களின் பொருளாதார மட்டத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், உயிர்ப் பல்வகைத்தன்மையுடனான சூழல் அமைப்பினைப் பாதுகாப்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் 19 மாவட்டங்களுக்கும் பிரதேச செயலகப் பிரிவுகள் 131 க்கு தாக்கம் செலுத்தப்பட்டுள்ள பிரதான சவாலொன்றாக யானை- மனித மோதல் தற்போது எரிகின்ற பிரச்சினையொன்றாவதோடு யானை மனித மோதலைக் குறைப்பதற்கு மின்வேலியை நிர்மாணித்தல் மற்றும் தற்போது உள்ள மின்வேலிகளை பராமரிக்கும் நடவடிக்கைகளை சிவில் பாதுகாப்பு படையுடன் ஒன்றாக நடத்திச் செல்லப்படுகின்றது. தற்போது சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்துடன் இணைந்து குருனாகல் மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் கிராமிய மின்வேலிகள் 26 நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு இன்னும் 13 மின்வேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், ஆளி பயிர்ச்செய்கை போன்ற இயற்கை உபாயங்களின் மூலம் யானைவேலிகளை அமைப்பது போன்ற கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. மயில்கள், செங்குரங்குகள், குரங்குகள் போன்ற வன விலங்குகளிடமிருந்து பயிர்ச்செய்கை நிலங்களுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுப்பதற்காக பழ மரங்களை நடுதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

சமூக மற்றும் சூழல் பிரதிபலன்களை நிலையாகப் பெற்றுக் கொள்ளல் உறுதிப்படுத்துவதற்காக முழு வனப் போர்வையொன்றை பாதுகாப்பதற்காகவும் சமூக கலந்து கொள்ளலுடன் மர நடுகையை மேற்கொள்வதன் மூலம் பசுமைப்போர்வையை விரிவுபடுத்தி **2025** ஆகும் போது வன போர்வை **30%** இனால் உயர்த்துவதனை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக வன பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் ஆரம்பம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே தேவையான சந்தர்ப்பங்களில் வன பாதுகாப்புத் திணைக்களத்துக்குரிய நிலங்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக விடுவித்து நாட்டில் நிலவுகின்ற உணவு நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறே நிலவுகின்ற ஒதுக்கங்களைப் பாதுகாப்பதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றாக விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நிலங்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு இலங்கையின் மாவட்ட நில குழுவின் இணக்கப்பாட்டுடன் வரைபடத்தைத் தயாரித்து பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் வன அடர்த்தி அதிகமான மாவட்டங்கள் 10 இனைத் தெரிவு செய்து வன பாதுகாப்புத் திணைக்களத்தின் முகாமை நிலங்கள் உள்ளடக்கிய வரைபடத்தைத் தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

விலங்குப் பாதுகாப்புக்கு முதலிடத்தை வழங்கி விலங்குகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்குகின்ற தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் விலங்குகளுக்கு உயர்ந்த பாதுகாப்பும் வசதியும் ஏற்படுமாறு அவைகளின் வாழிடங்களை விரிவுபடுத்தல், பார்வையாளர்களுக்கு உயர்ந்த வசதிகளை வழங்கி சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதோடு, ரிதியகம சபாரி பூங்காவில் செல்லப் பிராணிகள் அரணவும் இவ்வருடத்தினுள் திறக்கப்பட்டு உலகின் சிறந்த மிருகக்காட்சிசாலையை நடத்திச் செல்லும் நிறுவனமொன்று என இருக்கும் இலக்கினைக் கொண்ட நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும், விலங்கு ஆர்வலர்களுக்கு தாம் விரும்பிய விலங்கொன்றின் நலன்புரிப் பணிகளுக்காக “ சத்வ சவிய“ தியாகி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே விலங்குகளுக்காக உணவை வழங்குவதில் சிரமம் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி தேசிய மிருகக்காட்சிசாலைக்கு மிகவும் பாதித்துள்ளதோடு அப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக கஹபொல மற்றும் தியகம புல் வளர்க்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, அமைச்சின் கீழ் உள்ள ஒரே சட்ட ரீதியான நிறுவனமான அரச மரக் கூட்டுத்தாபனம் நாட்டின நம்பிக்கையை வென்ற சிறந்த மரங்கள் மற்றும் மரத்திலான பொருட்களின் வழங்குனர்களாகுதல் மற்றும் சந்தையில் உண்மையான தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நிலவுகின்ற தற்கால நிலைமையினுள் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் இவ்வருடத்தில் **2022.12.31** திகதி ஆகும் போது **5265.00** ரூ. மி. ஆன வருமானத்தை வழங்குவதற்கு முடிந்துள்ளது.

அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் வினைத்திறனை உயர்த்துவதன் மூலம் வருமான நிலையை அதிகரிப்பதற்கு முடியுமான அனைத்து முறைகளிலும் ஒத்துழைப்பை வழங்குவதற்கு அமைச்சு பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றது. அவ்வாறே, இத்திணைக்களங்கள் மூன்றினாலும் **2022.12.31** திகதி ஆகும் போது **2493.8** ரூ. மி ஆன சுற்றுலா வருமானத்தை ஈட்டுவதற்கு முடிந்துள்ளது.

தரை, வான் போன்று கடலிலும் மௌனமாக சஞ்சரிக்கும் வனவிலங்குகள் போன்றே நாட்டின் அழகைப் பாதுகாத்துக் கொண்டு உயிர்ப் பல்வகைத் தன்மையைப் பேணும் பாரிய செயற்பணியொன்றுக்கு தலைமைத்துவத்தை வழங்கி பொறுப்பேற்கப்பட்ட கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தலைமைத்துவத்தை வழங்கி பணியாற்றுகின்ற கௌரவ வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் கௌரவ பவித்ரா வன்னிஆரச்சி அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முன்னேற்ற அறிக்கையைத் தயாரிப்பதற்காக தகவல்களை வழங்கிய அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கும், ஏனைய அனைத்து அதிகாரிகளுக்கும், மொழிபெயர்ப்புப் பணிகளை நிறைவேற்றித் தந்த அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆர். எம். சீ. எம். ஹேரத்**
**செயலாளர்**
**வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

# அத்தியாயம் 1 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க , அதி விசேட வர்த்தமானி மூலம் நிறுவப்பட்ட அதன்படி வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலி மற்றும் அகழிகள் நிருமாணம் உள்ளடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள் வளர்ப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் இருந்த திணைக்களங்களான வனஜீவராசிகள் பாதுகாப்பு, வன பாதுகாப்பு, தேசிய மிருகக்காட்சிசாலைகள் போன்ற திணைக்களங்கள் **2022.03.08** திகதிய இலக்கம் **2270/14** உடைய வர்த்தமானிப் பத்திரிகை மூலம் இவ்வமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டது. அதன்படி வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் விடயப் பரப்பின் கீழே முன்னர் இடம்பெற்ற மரக் கூட்டுத்தாபனம் மற்றும் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்துக்கு மேலதிகமாக உரிய திணைக்களங்களின் கடமைப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டன.

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்புக்குரிய கொள்கைகள், கட்டளைகளின் பிரகாரம் பூமிக்கு மிகவும் உணர்வுபூர்வமான மரம் செடி கொடிகள் விலங்குகள் நான்க கால்களைக் கொண்டவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் உயிர்ப் பல்வகைத்தன்மை மற்றும் வன வளங்களைப் பாதுகாக்கும் பாரிய விடயப் பொறுப்பொன்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் இவ்வமைச்சினால் மேற்கொள்ளப்படுகன்றன.

அவ்வாறே, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் நாட்டின் நம்பிக்கையை வென்ற விலை மதிப்பற்ற மரங்கள் மற்றும் மரத் தளபாட வழங்குனர்களாக எதிர்வரும் ஐந்து வருடங்களினுள் ஆவதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குகின்றது. உணர்வுபூர்வமான பயிர்ச்செய்கைகளின் மூலம் தேசிய வனப் போர்வையை விரிவுபடுத்துதல் மற்றும் வன விலங்குகள் வாழும் இயற்கைச் சூழலைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 1.2 அமைச்சின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி

### தொலைநோக்கு

"வனசீவராசிகள் மற்றும் வன வளங்களை பேணிப் பாதுகாக்கும் நிலைபேறான தேசமொன்றைக் கட்டியெழுப்புதல்"

### செயற்பணி

"வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பினூடாக உயிர்ப் பல்வகைமையை பேணிக் காப்பதை நோக்காகக் கொண்டு அந்தந்த இடங்களிலுள்ள தாவரங்களைப் பாதுகாத்தல் மற்றும் அந்தந்த இடங்களிலும் அதற்குப் புறம்பாகவும் கால்நடைகளைப் பாதுகாத்தல், வலுவாதாரமிக்க மரத் தொழிலை ஊக்குவிப்பதற்காக கொள்கைகளை உருவாக்குதல், முன்னோடி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் மற்றும் செயலுருப்படுத்தலுக்காக தலைமைத்துவம் வழங்குதல்".

## 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் விடயப் பரப்பு

#### விடயப் பரப்பெல்லை

வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பினூடாக உயிர்ப் பல்வகைமையை பேணிக் காத்தல் மற்றும் சுற்றாடலுக்கு நலன் பயக்கும் பயிர்செய்கைகளின் ஊடாக தேசிய வனாந்தரங்களை விரிவாக்குதல் மற்றும் வன சீவராசிகள் வாழும் இயற்கைச் சுற்றாடலை பாதுகாத்தல்.

#### பணிகளும் செயற்பாடுகளும்

1. அரசின் மூலம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வேறு தேசிய கொள்கைகளின்படி அமைந்து "வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு" ஏற்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு விடயத்துக்கு உரிய கொள்கைகளைத் தொகுத்தல்.
2. தேசிய வரவுசெலவுத்திட்டம், அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்,
3. அமைச்சின் விடயத்துக்கு கீழ் உரிய திணைக்களங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தொகுத்தல், செயற்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு .

**விசேட முன்னுரிமைகள்**

1. வன சீவராசிகளின் பாதுகாப்புக்குத் தேவையான வனப்பூங்காக்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் வனசீவராசிகளின் உணவுப் பயிர்களை விரிவுபடுத்தல்.

2. வனசீவராசிகளினால் கிராமப்புற வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர் செய்கை ஆகியன தொடர்பான பாதிப்புக்களை குறைத்துக் கொள்வதற்கான நவீன வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்

3. யானை மனிதன் மோதலை கட்டுப்படுத்தும் வகையில் அந்த ஆபத்தான பிரதேசங்களில் யானை வேலிகள், அகழிகள் உட்பட பாதுகாப்பான வேலைத்திட்டங்ளுக்கு நிகராக சமுதாய அடிப்படையிலான பாதுகாப்பு செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல்.

4. வனப் பயிர்செய்கைகளை விரிவாக்குவதன் மூலம் வன அடர்த்தியை உயர் மட்டத்துக்குக் கொண்டு வருவதற்காக வீட்டுத்தோட்ட மட்டத்தில் போன்றே பாடசாலைகள், வைத்தியசாலைகள், அலுவலகங்கள், வேலையிடங்கள் மற்றும் பாகைள் குறைவான பிரதேசங்களில் போன்றே நகர பூங்காக்களிலும் வனச் செய்கையை அறிமுகப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்துதல்.
5. பசுமைப் போர்வையை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.
6. சதுப்பு நிலங்கள் மற்றும் ஈரநில அமைப்பினைப் பாதுகாத்துக் கொண்டு அவற்றை சேதப்படுத்தும் மனித செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.
7. கழுவிச் செல்லப்பட்ட மற்றும் தரிசு நிலங்களை அடையாளம் கண்டு, தென்னை, வேறு பயிர்கள், புல் மற்றும் விவசாய வனச் செய்கைப் பூங்காக்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
8. தொழிற்சாலைகள் அண்டிய காடு வளர்ப்பு கீற்றுக்கள், நகர்ப்புற மரங்கள், அதிவேக மற்றும் பெருந் தெருக்களும் உட்பட வீதியின் இரு பக்கங்களிலும் மரநடுகை, அரச அலுவலகங்கள் சார்ந்த காணிகள், மாடி வீடுகள் சார்ந்த மர வளர்ப்பு, வனப் பூங்காக்கள் மற்றும் வீட்டு விவசாய காடு வளர்ப்பினை ஊக்கப்படுத்தல்.
9. காடுகள் மீள் வளர்ப்புக்காக கருத்திட்டங்களை செயற்படுத்தல்.

10. நதி சார்ந்த மற்றும் நிலம் சார்ந்த குறிப்பிட்ட மணல் அகழ்வு கீற்றுக்களை உருவாக்குதல் மற்றும் நதிப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி
11. பசுமை மற்றும் நட்புறவான நகரங்கள் மற்றும் வாழிட எண்ணக்கருவை உருவாக்குதல் மற்றும் ஊக்குவிப்பதும், சுற்றாடல் உணர்திறன்மிக்க மக்களை உருவாக்குவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்தல்.
12. வனவிலங்குகளின் பாதுகாப்புக்காக அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைப பாதுகாத்தல், அப்பகுதிகளில் வாவிகள் நதிகள் மற்றும் காடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வன விலங்குகளின் உணவு விருத்திக்குத் தேவையான பயிர்ச்செய்கைகளை உருவாக்குதல்.
13. விலங்குகளின் நலன்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# 1. 4.நிறுவன ஒழுங்கமைப்பு



## 1.5 அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
- வனப் பாதுகாப்புத் திணைக்களம்
- தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்
- அரச மரக் கூட்டுத்தாபனம்
- சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் (ESCAMP)

## 1.5.1 அமைச்சின் கடமைப் பொறுப்புக்களை செயற்படுத்தும் பிரிவுகள்

### 1.5.1.1 நிர்வாகப் பிரிவு

மனித வள முகாமைத்துவம் மற்றும் பௌதிக வளத்தை முகாமை செய்வதனால் அமைச்சின் நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல், அமைச்சின் நிர்வாகம் மற்றும் ஒழுக்கத்தினை நடத்திச் செல்லல், அமைச்சின் அனைத்து பணியாளர்களினதும் நிறுவன செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைச் சபை, பாராளுமன்ற கேள்வி மற்றும் அமைச்சரவை நிரூபங்களுக்கு உரிய கருமங்களை மேற்கொள்ளுவது நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. .

### 1.5.1.2 திட்டமிடல் பிரிவு

வனவிலங்குகளின் பாதுகாப்பு, வன பாதுகாப்பு மற்றும் விலங்குகளின் நலன்கள் போன்ற விடயங்களுக்குரியதான திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி இப்பிரிவு பொறுப்புக் கூறுகின்றது. அவ்வாறே வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின்படி இலக்கினை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதும் இப்பிரிவினால் இடம்பெறுகின்றது.

### 1.5.1.3 அபிவிருத்திப் பிரிவு

வனஜீவராசிகள் பாதுகாப்பு, வன பாதுகாப்பு மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களங்களிலும் அரச மரக் கூட்டுத்தாபனம், சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்துக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

### 1.5.1.4 நிதிப் பிரிவு

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பிரதான நிதி அதிகாரியாக நிறைவேற்ற வேண்டிய அமைச்சினதும் அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிதி நிர்வாக கடமைப் பொறுப்புக்குத் தேவையான நேரடி ஒத்துழைப்பினை வழங்குவது இப்பிரிவின் பிரதான பணி மற்றும் கருமமாகும். அதன்படி, அமைச்சினதும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் நிதி நிர்வாக நடவடிக்கைகளை திட்டமிடல், ஏற்பாடு செய்தல் செயற்படுத்தல் மற்றும் அதற்குரிய நிர்வாக நடவடிக்கைகள் இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

### 1.5.1.5 தொழில்நுட்பப் பிரிவு

வனஜீவராசிகள் , வன பாதுகாப்பு மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக உள்ள விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும் அப்பணிகளை முறையாகவும் பயனுள்ளதாகவும் செயன்முறைக்குட்படுத்தும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 1.5.1.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சின் நிதி மற்றும் செயற்பாட்டு பணிகள் பற்றி செயற்படுகின்ற உள்ளக நிர்வாக முறைகளில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மதிப்பீட்டுக்காக அடிக்கடி கண்காணிப்பு சோதனைகளை நடத்துதல் மற்றும் திணைக்களங்கள் தொடர்பாக விசெட பரிசோதனை நடவடிக்கைகளை செயற்படுத்துதலும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 1.5.1.7 கருத்திட்டப் பிரிவு

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சுக்கு உரியதாக இடம்பெறுகின்ற ஊடகத் தகவல்களை சரி செய்வதற்கு செயற்படுதல், உரிய கருத்திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்தல் இப்பிரிவின் மூலம் இடம்பெறுகின்றது.

#### 1.5.1.8 சட்டப் பிரிவு

அமைச்சின் விடயப் பரப்புக்குரிய திணைக்களங்கள்/ இடங்களில் நாளாந்த நடவடிக்கைகளில் சட்ட வரைபுத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தை ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளரை பங்குதாரராக்க் கொண்டு ஒப்படைக்கப்படுவதும் நிலவுகின்ற வழக்கு நடவடிக்கைகள் பற்றிய சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளல் இப்பிரிவினால் இடம்பெறுகின்றது.

**1. 6** வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள்/ நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்குரிய முழு ஒதுக்கீடுகளின் சாராம்சம் **(2022.12.31** திகதிக்கு)

| **நிறுவனம்** | **மூலதனம் (ரூ.மி)** | | | | | **மீண்டுவரும் (ரூ.மி)** | | | **மூலதனம் + மீண்டுவரும் முழு மொத்தம் (ரூ.மி)** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திரட்டு நிதியம் | விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொ | திணைக்களங்களின் நிதியம் | வெளிநாட்டு நிதியம் | மூலதன மொத்தம் | திரட்டு நிதியம் | திணைக்களங்களின் நிதியம் | மீண்டுவரும் மொத்தம் | |
| வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | **10.40** | ***1000.00** | | | **1010.40** | **270.10** | | **270.10** | **1280.5** |
| வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | **227.00** | | **401.17** | | **628.17** | **2029.00** | **1710.99** | **3739.90** | **4368.07** |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | **566.00** | | **70.00** | | **656.0** | **1643.00** | | **1396.00** | **2299.00** |
| தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | **180.00** | - | **76.02** | | **256.02** | **569.00** | **827.00** | **1396.00** | **1652.02** |
| சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் | - | - | - | **1426.70** | **1426.70** | | | | **1426.70** |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | | | **1151.49** | | **1151.49** | | **4468.00** | **4468.00** | **5619.49** |
| **மொத்தம் (ரூ.மி)** | **983.40** | **1000.00** | **1698.66** | **1426.70** | **5128.78** | **4511.10** | **7005.99** | **11270.00** | **16645.78** |

*அமைச்சு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணகளத்தின் ரூ.மி 600 மற்றும் அமைச்சு மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் ரூ.மி. 400.

# அத்தியாயம் 2 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

## 2.1 அமைச்சு மற்றும் திணைக்களங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்ற சாராம்சம் —2022

### (அ) திரட்டு நிதியம்

| நிறுவனம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | உண்மைச்செலவு (ரூ.மில்) | செலவு % |
|---|---|---|---|
| வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 10.4 | 5.2 | 48 |
| வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 227.0 | 148.00 | 65 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 566.0 | 393.38 | 69 |
| தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | 180.00 | 145.91 | 81 |
| சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் | 1426.0 | 1301.62 | 91 |
| **மொத்தம்** | **2409.4** | **1994.11** | **82** |

### (ஆ) விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு

| நிறுவனம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | உண்மைச்செலவு (ரூ.மில்) | செலவு % |
|---|---|---|---|
| வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு + வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 600.00 | 509.38 | 86 |
| வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு + வன பாதுகாப்புத் திணைக்களம் | 400.00 | 300.00 | 75 |
| **மொத்தம்** | **1000.00** | **809.38** | **80** |

### (இ) திணைக்களங்களின் நிதியம்

| நிறுவனம் | ஒதுக்கீடு (ரூ.மில்) | உண்மைச்செலவு (ரூ.மில்) | செலவு % |
|---|---|---|---|
| வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 401.17 | 147.98 | 37 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் (காட்டுத் திணைக்களங்களின் நிதியம்) | 70.0 | 47.81 | 68 |
| தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | 76.02 | 24.21 | 32 |
| **மொத்தம்** | **547.19** | **220.0** | **40.2** |

## 2.2 நிறுவன முன்னேற்ற சாராம்சம் 2022.12.31 திகதிக்கு

### 2.2.1 அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நிதி முன்னேற்றம்

| நிறுவனம் | மூலதன ஒதுக்கீடு ( ரூ .மி ) | உண்மைச் செலவினம் ( ரூ .மி ) | மீண்டுவரும் ஒதுக்கீடு ( ரூ .மி ) | உண்மைச் செலவினம் ( ரூ .மி ) |
|---|---|---|---|---|
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 1151.50 | 24.00 | 5248.00 | 3057.00 |

### 2.2.2 அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி முன்னேற்றம்

| பிரதான கூறு | 2022 வருடாந்த இலக்கு | 2022.12.31 திகதிக்கு முன்னேற்றம் | முன்னேற்றம் % |
|---|---|---|---|
| குற்றிகள் (க.மீ.) | 107,619 | 103,121 | 96 |
| சிலிப்பர் (அலகு) | 29,230 | 34,113 | 117 |
| தளபாடம் (ரூ.மி.) | 255 | 292 | 115 |
| மின்கம்பம்(அலகு) | 1,277 | 1,837 | 144 |
| தரித்த மரம் (க.மீ.) | 8,728 | 3,432 | 39 |
| வட்டக் கம்பம் (அலகு) | 29,410 | 74,066 | 252 |
| வேலிக்கம்பம் (அலகு) | 30,377 | 84,911 | 280 |
| யானைவேலி கம்பம் (அலகு) | 17,690 | 10,448 | 59 |
| விறகு (க.மீ.) | 40,482 | 93,785 | 232 |

### 2.2.3 அரச மரக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானம் 2022.12.31 திகதிக்கு

| பிரதான கூறு | 2022 வருடாந்த இலக்கு (ரூ.மி.) | 2022.12.31 திகதிக்கு இலக்கு (ரூ.மி.) | 2022.12.31 திகதிக்கு முன்னேற்றம் (ரூ.மி.) | முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| குற்றிகள் (க.மீ.) | 3,263.0 | 3,263.0 | 3,623.0 | 111 |
| சிலிப்பர் (அலகு) | 301.6 | 301.6 | 603.0 | 200 |
| தளபாடம் (ரூ.மி.) | 439.0 | 439.0 | 427.0 | 97 |
| மின்கம்பம்(அலகு) | 14.5 | 14.5 | 33.0 | 228 |
| தரித்த மரம் (க.மீ.) | 1243.0 | 1243.0 | 372.0 | 30 |
| வட்டக் கம்பம் (அலகு) | 5.0 | 5.0 | 12.0 | 240 |
| வேலிக்கம்பம் (அலகு) | 7.0 | 7.0 | 12.0 | 171 |
| யானைவேலி கம்பம் (அலகு) | 109.5 | 109.5 | 71.0 | 65 |
| விறகு (க.மீ.) | 25.0 | 25.0 | 69.0 | 276 |
| **ஏனையவை** | | | 43.0 | |
| **மொத்தம்** | 5408.0 | 5408.0 | 5,265.0 | 97 |

## 2.3 சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் - நிதி முன்னேற்றம்

| நிறுவனம் / கருத்திட்டம் | 2022.01.01 2022.12.31 திகதிக்கு ஒதுக்கீடு (ரூ.மி) | 2022.01.01 2022.12.31 திகதிக்கு உண்மைச் செலவினம் ( ரூ .மி ) | % |
|---|---|---|---|
| சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் | 1426.0 | *1301.62 | 29 |

*கருத்திட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரூ. மில்லியன் **1,301.62** ஆன செலவின் அளவு **(**வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியத்தின் கீழ்**)** பண அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளதோடு திறைசேரியினால் செலவாக அறிக்கையிடப்பட்டது கருத்திட்டத்தின் மூலம் **2022** வருடத்துக்குரியதாக முன்வைக்கப்படுகின்ற மீண்டும் பெறப்படும் விண்ணப்பங்களில் நிதியத்துக்கான விண்ணப்பங்களில் செலவின் மதிப்பு ரூ. மில்லியன் **1,310.6** ஆகும். அவ்வாறே உள்நாட்டு நிதியத்துக்காக ரூ. மில்லியன் **3.85** ஆன செலவொன்று அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன்படி கருத்திட்டத்துக்காக ரூ. மில்லியன் **1,314.4** ஆன செலவொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வித்தியாசத்துக்கு காரணமாக அமைந்தது **2021** டிசம்பர் மாதம் உண்மையாகவே ஏற்கப்பட்ட எனினும் **2021** வருட இறுதியில் திறைசேரிக்கு முன்வைக்கப்பட்ட மீண்டும் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்களில் அச்செலவு உள்ளடக்கப்படாமையும் அச்செலவு **2022** வருடத்தில் முன்வைக்கப்பட்ட மீண்டும் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்களில் உள்ளடக்கப்படல் மற்றும் **2022** டிசம்பர் மாதத்தின் இறுதியில் முன்வைக்கப்பட்ட மீண்டும் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்களில் **2022** வருடத்தின் டிசம்பருக்கான முழுச் செலவு உள்ளடக்கப்படாமையும் போன்ற விடயங்களின் காரணத்திலாகும்.

## 2.3 .1 சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம்- முன்னேற்றம் (கூறுகளின்படி )

| நிறுவனம் / கருத்திட்டம் | | 2022.01.01 2022.12.31 திகதிக்கு ஒதுக்கீடு (ரூ.மி) | 2022.01.01 2022.12.31 திகதிக்கு உண்மைச் செலவினம் ( ரூ .மி ) | நிதி முன் னேற் றம் % |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு நிதியம் | | | | |
| **கூறு 1: முன்னோடி தரைத்தோற்ற திட்டமிடலும் முகாமைத்துவமும்** | | | | |
| **கூறு 1** | முன்னோடி தரைத்தோற்ற திட்டமிடலும் முகாமைத்துவமும் | **33.9** | **30.35** | **89.5%** |
| **கூறு 2 இயற்கை வளங்களின் பேண்தகு பயன்பாடும் மனித-யானை சகவாழ்வும்** | | | | |
| உப கூறு 2 (அ ) | வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக இயற்கை வளங்களின் பேண்தகு பயன்பாடு | **5.01** | **5.76** | **100%** |
| உப கூறு 2 (ஆ) | வாழ்வாதார பாதுகாப்புக்கு மனித-யானை சகவாழ்வு | **316.95** | **316.85** | **99.9%** |
| **கூறு 3 பாதுகாக்கப்பட்ட பகுதி முகாமைத்துவமும் நிறுவன திறனும்** | | | | |
| உப கூறு 3 (அ) | பாதுகாக்கப்பட்ட மற்றும் முகாமைத்துவ பகுதியின் பாதுகாப்பு | **318.48** | **215.93** | **67%** |
| உப - **கூறு** 3 (ஆ ) | பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் சூழல் சுற்றுலா கைத்தொழில் | **180.24** | **65.4** | **36%** |
| உப - **கூறு** 3 (இ ) | வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவன திறன் மற்றும் முதலீட்டு திறன் விருத்தி | **516.5** | **614.0** | **100%** |
| **கூறு 4:** | **கருத்திட்ட முகாமைத்துவம்** | **55.0** | **53.2** | **94%** |
| **மொத்தம்** | | **1426.0** | **1301.6** | **91.2%** |

## 2.4 திணைக்கள சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் - 2022 .12.31 திகதிக்கு

| நிறுவனம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | வருமானம் (ரூ.மி) | | | மொத்தம் (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு | வெளி நாட்டு | மொத்தம் | உள்நாட்டு | வெளி நாட்டு | வேறு | |
| வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | **810,542** | **301,912** | **1,112,454** | **60.54** | **1220.22** | **583.63** | **1864.40** |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | **215,778** | **55,579** | **271,357** | **16.01** | **67.23** | ***12.50** | **94.31** |
| தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் | **2,128,035** | **57,596** | **2,185,631** | **338.02** | **133.15** | **63.92** | **535.09** |
| **முழு மொத்தம்** | **3,154,355** | **415,087** | **3569442** | **414.57** | **1420.6** | **660.05** | **2493.8** |

## 2.4.1 திணைக்களங்களின் அபிவிருத்திப் பணிகள்

- **வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**



வனவிலங்கு சட்டத்தைச் செயற்படுத்தல்



மின்வேலிகளைப் புதுப்பித்தல்

- **வன பாதுகாப்புத் திணைக்களம்**



விவசாய வனச் செய்கையை நிறுவுதல்



காடுகளை அளந்து எல்லைகளைக் காட்டி பாதுகாக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட

- **தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்**



தெஹிவளைமிருகக்காட்சிசாலையில் சிங்க ஒதுக்கிடத்துக்கான புனர்நிர்மாண நடவடிக்கைகள்



தெஹிவளைமிருகக்காட்சிசாலையில் மெக்கோ கிளிகளுக்கான ஒதுக்கிடம்

• **அரச மரக் கூட்டுத்தாபனம்**



கிழிக்கப்பட்ட மரங்களைப் பாதுகாத்தல், பதனிடல் மற்றும் உலர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்




அரிமரம் பற்றிய தகவல்கள் உள்ளடக்கிய அச்சுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள்

## 2.5 அமைச்சின் விசேட வெற்றிகள் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2.5.1 விசேட வெற்றிகள்

- புதிய தாமரை வகையொன்று (*Stabilanthes glandulata*) நக்கல்ஸ் ஒதுக்கத்திலிருந்து இனங்காணப்பட்டமை.
- வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள நீண்ட காலத்துக்குள் சேதத்துக்குள்ளாகியிருந்த வத்தேகம கெபிலித்த வன ஒதுக்கத்தில் 1033 ஹெக்டயாரான கன்றுகளை நட்டு ஒதுக்கப் பிரதேசத்தை மீளுருவாக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தல்.

- வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் முகாமை செய்யப்படுகின்ற 201 காடுகளுக்காக , வன முகாமைத்துவ திட்டத்தைத் தயாரித்து நிறைவு செய்தல்.
- தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்கள கருத்திட்ட பயிற்சி நிபுணத்துவ மட்டம் 3 மற்றும் 4 பற்றிய சான்றிதழை வழங்கும் நிறுவனமொன்றாக உருவாகுதல்.

- அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை தேசிய கைத்தொழில் சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட 2022 CNCI ACHIEVER விருது விழாவில் அரச உற்பத்திப் பிரிவிற்காக "கைத்தொழில் சிறப்பின் " Achiever விருதைப் பெற்றுக் கொண்டது.
- அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ISO 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் செயன்முறையின் ஆரம்ப கட்டத்தை நிறைவு செய்து பூஸ்ஸ தளபாட காட்சியறைக்கு ISO 9001:2015 தரச் சான்றிதழ் பெற்றக் கொள்ளப்பட்டது.

### 2.5.2 சவால்கள்

- நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை மற்றும் நிலவுகின்ற பொருளாதார சவாலின் காரணமாக வருமானம் ஈட்டும் நிறுவனங்களான வனஜீவராசிகள், வன பாதுகாப்பு, மிருகக்காட்சிசாலை போன்ற திணைக்களங்களின் வருமானம் குறைதல்.
- வனஜீவராசிகள், வன பாதுகாப்பு, மிருகக்காட்சிசாலை போன்ற திணைக்களங்களில் நிலவுகின்ற ஊழியர் பற்றாக்குறை.
- நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற யானை மனித மோதலைத் தீர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான பௌதிக மற்றும் மனித வளம் அவசியப்படுதல், மின்வேலியை அமைப்பதில் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதற்கு தொடர்புபடும் நிறுவனங்களுக்கிடையில் உள்ள இடைப்பட்ட தொடர்பில் முகம்கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு, மின்வேலி உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது உரிய நிறுவனங்களில் ஏற்படும் காலதாமதம்.
- வனவிலங்கு குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொறுமுறையை வலுப்படுத்தி நடத்திச் செல்வதில் துறை சார்ந்த அனுபவம் மிகுந்த பயிற்றப்பட்ட அதிகாரிகள் போதுமானதாக இன்மை.
- வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளுக்கு இரசாயன பசளையைப் பயன்படுத்துவதற்கு உள்ள அவகாசம் குறைந்துள்ள காரணத்தினால் கன்றுகளின் வளர்ச்சிக்கு சிறு தாக்கமொன்று ஏற்படுதல்.
- வன பாதுகாப்புத் திணைக்களம் பைனஸை அகற்றுவதற்கு திட்டமிட்டிருந்தாலும் மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித்திறன் போதுமானதாக இல்லாமையினால் அதனை நிறைவேற்ற முடியாமை.
- வன பாதுகாப்புத் திணைக்களத்துக்குரிய காணிகளை சட்ட ரீதியற்ற விதத்தில் கைப்பற்றிக் கொள்ளும் பிரச்சினை.
- நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் நாடுகளுக்கிடையில் மேற்கொள்கின்ற விலங்குப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதில் சிரமமாதல் மற்றும் அதன் மூலம் புதிய இனப்பெருக்கங்களை மேற்கொள்வதற்கு தடங்கல் ஏற்படுதல்.
- மிருகக்காட்சிசாலையினுள் விலங்குகளைத் தடுத்து வைத்துக் கொள்வதற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட தாக்கங்களின் போக்கு உயர்வடைந்து செல்லல் மற்றும் அடிக்கடி மாறுகின்ற விலங்குகளின் நலன்களின் பெறுபெறுகள் பொருந்தாமை.
- தற்கால பொருளாதார நெருக்கடியில் இலங்கை வன விஞ்ஞான நிறுவனம் மற்றும் தேசிய வனவிலங்கு அய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பெரிய அளவிலான நிர்மாணங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை அதிகளவு உயர்ந்து செல்லும் காரணத்தினால் பணியை நிறைவு செய்வதற்கு சவாலாக இருத்தல்.
- பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு தளபாடங்களை விற்பனை செய்வது பற்றி பிரச்சினைகள் ஏற்படுதல். .

## 2.5.3 எதிர்கால இலக்குகள்

- தற்போது சேதத்துக்குள்ளாகி இருக்கும் வனச் செய்கைகள் பற்றிய கணக்கெடுப்பை மேற்கொண்டு, அவ்வனச்செய்கையை மீளுருவாக்கம் செய்யும் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- வன பாதுகாப்பு திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள காடுகளின் விஞ்ஞான ரீதியானதும் முகாமை பற்றி தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை புதுப்பித்தல்.
- ஒதுக்கமாக பிரகடனப்படுத்தப்பட்ட காடுகள் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்து நடத்திச் செல்லப்படுகின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் மேலும் காடுகளாக அபிவிருத்தி செய்ய முடியுமான காட்டுப் பகுதிகளை உள்ளடக்குமாறு எல்லைகளை இனங்கண்டு வரைபுக்குட்படுத்தல்.
- பத்து வருட பாரிய காட்டுத் திட்டம் **(2020-2030 )** தயாரிக்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.
- **2025** ஆகும் போது வனப் போர்வை **30%** உயர்த்துவதற்கான செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வழிமுறைகளைத் தயாரித்தல்.
